# அறிவித்தல்

## இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு இலங்கை விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. முகாமையாளர் (தொழிற்சாலை) - முகாமைத்துவ சேவை தரம் (MM 1-1) – பதவி 01

MM 1-1 - ரூபா 53175 - 10 x 1375 – 15 x 1910 – 95,575/- அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு உரித்தாகும்.

(2024.01.01) ஆம் திகதிக்கு உரித்தாகும் ஆரம்ப சம்பளம் - ரூபா 53,175/-

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள தகைமை 01 அல்லது 02)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயந்திர பொறியியல் விஞ்ஞானம்/ பொறியியல் விஞ்ஞானம்/ உற்பத்தி முகாமைத்துவம்/ மின் பொறியியல் விஞ்ஞான துறையில் பட்டம் பெற்றிருத்தல்

   **மற்றும்**

   பட்டம் பெற்ற பின் அரசு அல்லது அரசு சார் நிறுவனம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் உற்பத்தியகச்சாலை ஒன்றில் அலுவலக மட்டத்தில் குறித்த துறை பதவி ஒன்றின் கீழ் 03 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) ஏழு (07) அளவுக்கு குறையாத அளவு தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

   **மற்றும்**

   இந்தத் தகைமையை பெற்ற பின் அரசு அல்லது அரசு சார் நிறுவனம் ஒன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் மருந்து உற்பத்திச்சாலை ஒன்றில் அலுவலக மட்டத்தில் பதவி ஒன்றில் 03 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 01 அல்லது 02)**

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.
2. ''கனிஷ்ட முகாமைத்துவ'' JM 1 – 1 சேவை தரம் சார்ந்த துறை பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து ஆண்டுகள் (05) திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது.

### 02. கணினி மற்றும் தரவு அதிகாரி-கனிஷ்ட முகாமைத்துவ சேவை தரம் (JM 1-1) -பதவி - 01

JM 1-1 - ரூபா 42,600 – 10 x 755 – 18 x 1135 – 70,580/- அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு உரித்தாகும்.

(2024.01.01) ஆம் திகதிக்கு உரித்தாகும் ஆரம்ப சம்பளம் - ரூபா 42,600/-

**தகைமை**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள தகைமை 01 அல்லது 02 அல்லது 03)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணினி விஞ்ஞான பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

    **மற்றும்**

    தகுதியை பெற்ற பின் அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் கணினி கட்டமைப்பு சார்ந்த துறையில் இரண்டு ஆண்டுகள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

02. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை NVQ ஆறு (06) அல்லது NVQ ஏழு (07) அளவுக்கு குறையாத அளவு தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

    **மற்றும்**

    தகுதியை பெற்ற பின் அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறித்த துறையில் ஐந்து (05) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

03. மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை NVQ ஐந்து (05) அளவுக்கு குறையாத அளவு தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல்.

**மற்றும்**

தகுதியை பெற்ற பின் அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறித்த துறையில் பத்து (10) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 01 அல்லது 02)**

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவி தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை மட்டத்தின் II தர கணினித் துறை பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது.

### 03. விவசாய அதிகாரி – கனிஷ்ட முகாமைத்துவ சேவை தரம் (JM 1-1) - பதவி - 01

JM 1-1 - ரூபா 42,600 – 10 x 755 – 18 x 1135 – 70,580/- அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு உரித்தாகும்.

(2024.01.01) ஆம் திகதிக்கு உரித்தாகும் ஆரம்ப சம்பளம் - ரூபா 42,600/-

**தகைமை**

வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள தகைமை 01 அல்லது 02)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய பட்டத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

தகுதியை பெற்ற பின் அரச கூட்டுத்தாபனம், சபை, சட்டரீதியான நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் பயிர்ச்செய்கை தொடர்பில் இரண்டு (02) ஆண்டுகள் சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 01 அல்லது 02)**

1. மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவி தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை மட்டத்தின் II தர விவசாய துறை பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது**

22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது.

**வேறு**

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

a. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
b. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணி புரிவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
c. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையின் மூலம் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் கூட்டுத்தாபன ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய ஆட்சேர்ப்பு இடம்பெறும். ஊழியர் சேமலாப நிதியத்திற்கு நியமனம் பெறுபவரிடம் இருந்து 8% தொழில் வழங்குநரிடம் இருந்து 12% என பங்களிப்புத் தொகை செலுத்தப்படுதல் வேண்டும். அது தவிர ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நியமனம் பெறுபவரின் சம்பளத்தில் 3% இற்கு இணையான தொகை செலுத்தப்படும்.

அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்களின் முழுமையான சுயவிபரக்கோவை மற்றும் குறித்த சான்றிதழ்களின், உறுதி செய்யப்பட்ட நிழல் பிரதியை இணைத்திருத்தல் வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தலைவர், இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம், இல.: 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன மஹரகம என்ற முகவரிக்கு 2024.12.06 ஆம் திகதி அல்லது அன்றைய திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். உங்களது தொலைபேசி இலக்கம் மற்றும் உங்களைப் பற்றி விசாரிக்க முடியுமான உறவினர் அல்லாத இருவரின் முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்களை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

தபாலில் காணாமல்போகும் அல்லது தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் எமது கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காது.

**தலைவர்**
**இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்**